# தமிழர்களை வஞ்சிக்கும் டெல்லிக்கு எதிரான ஜனநாயகப் போரில் தமிழ்நாடு வெற்றி பெறும்!

## திருவண்ணாமலை வாக்கு சேகரிப்பில் – அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!



**திருவண்ணாமலை, ஏப். 6- தமிழர்களை வஞ்சிக்கும் டெல்லிக்கு எதிராக, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நடத்தும் ஜனநாயகப் போரில் தமிழ்நாடு நிச்சியம் வெற்றிபெறும் என்று, திருவண்ணா மலையில் வீதி, வீதியாக வாக்கு சேகரிப்பின்போது, பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக வேட்பாளருமான எ.வ.வேலு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

03.04.2026 வெள்ளிக்கிழமை காலை 7.00மணிக்கு திருவண்ணா மலை அண்ணா மலையார் திருக்கோவில் எதிரில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், திருவண்ணா மலை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் பொதுமக்களிடம் வாக்குசேகரித்தலை தொடங்கினார்.

அண்ணாமலையார் திருக்கோ வில் எதிரிலிருந்து தொடங்கிய வாக்குசேகரிக்கும் நிகழ்ச்சி தேரடி வீதி, கடலைக் கடை சந்திப்பு, கடம்பராயன் தெரு, அய்யங்குளத் தெரு, திருக்கோவிலூர் சாலை வழியாக திருவள்ளுவர் சிலை வரை, வீதி, வீதியாக பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடம் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வாக்குச் சேகரித்தார்.

வாக்குசேகரிப்பின்போது பேசியதாவது:–

இது வெறும் வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி அல்ல, இது ஒரு ஜனநாயகப் போர். தமிழ் நாட்டை, தமிழர்களை வஞ்சிக்கும் டெல்லி ஏகாதிபத்தியமான மோடி அரசை எதிர்த்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடக்கும் ஜனநாயகப் போர்.

டெல்லி ஏகாதிபத்தியமான பாரதிய ஜனதா அரசு, தமிழ் நாட்டிற்கு தரவேண்டிய திட்டங்களுக்கான நிதியோ, வெள்ள நிவாரண நிதியோ அல்லது கல்வி நிதியோ தர மறுக்கிறார்கள்.

இந்தியாவிலேயே ஜி.எஸ்.டி.யாக அதிகம் வசூலிக்கப்படுவது தமிழ்நாட்டில்தான். ஆனால், நமக்கு 1ரூபாய்க்கு 29பைசாக்கள் தருகிறார்கள். மீதித் தொகை நம்முடைய பணம் எங்கே செல்கிறது தெரியுமா? வட மாநிலங்களான உத்திரப்பிரதேசம், பீகார், இராஜஸ்தான், மகாராஸ்டிரம் போன்ற பகுதிகளுக்கு நம்முடைய வரிப் பணம் செலவிடப்படுகிறது.

நமது பேரறிஞர் அண்ணா பொறுப்பேற்றவுடன் இருமொழிக் கொள்கைதான் தமிழ் நாட்டிற்கு என்று சட்டம் இயற்றினார். அதை தலைவர் கலைஞரும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலினும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

அண்ணா தெளிவாகச் சொன்னார் நமக்கு தாய் மொழி தமிழ். தொடர்பு மொழி ஆங்கிலம் என்று. இந்தி படித்தால்தான் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை தரமுடியும் என்று டெல்லி ஏகாதிபத்தியம் கொக்கரிக்கிறது.

பீகாரிலும், உத்திரப்பிரதேசத்திலும் இந்தி படித்தவர்கள் என்ன செய்கிறார்கள். நமது தமிழ்நாட்டில் கொத்தனார் வேலைகளிலும், மருத்துவமனைகளிலும், தொழிற்சாலைகளிலும் கூலி வேலை செய்து வருகிறார்கள். தமிழர்கள் தமிழோடு, தொடர்பு மொழியான ஆங்கிலத்தை கற்றதால்தான், கடந்த 50 ஆண்டுகளாக வெளிநாடுகளில் கணினி தொழில்நுட்பத்திலும், வேலை வாய்ப்பிலும் உயர்ந்திருக்கிறார்கள்.

இந்தி படித்தால்தான் கல்வி மானியம் தரப்படும் என டெல்லி ஏகாதிபத்தியமான மோடி அரசாங்கத்தைப் பார்த்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நீங்கள் கோடி கொட்டிக் கொடுத்தாலும், எங்களுக்கு இந்தி வேண்டாம், நாங்கள் இருமொழிக் கொள்கையில் உறுதியாக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்.

நமது கூட்டணி என்பது மதச்சார்பற்றது, சர்வாதிகாரத்திற்கு எதிரானது, ஜனநாயகத்தை பாதுகாக்கும் கொள்கை வழிக் கூட்டணி. தமிழ்நாட்டை, தமிழர்களை தொடர்ந்து வஞ்சிக்கும் டெல்லி ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவோம், தமிழ்நாடு வெல்லட்டும். இவ்வாறு உரையாற்றினார்.

வாக்குச்சேகரிப்பு நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜய ரங்கன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், காங்கிரஸ் மாவட்டத் தலைவர் கே.குணசேகரன், தி.க. தலைவர் சி.மூர்த்தி, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் சீனி.கார்த்திகேயன், தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் வி.எம்.நேரு, சி.பி.எம். எம்.சிவக்குமார், சி.பி.ஐ., மாவட்ட செயலாளர் இரா.திருமலை, முஸ்லீம் லீக் மாவட்ட தலைவர் ஐ.எம்.சுலைமான் கான், விடுதலைச்சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் ச.நியூட்டன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் நாசர் உசேன், மக்கள் நீதி மையம் மண்டல பொறுப்பாளர் இரா. அருள், மனிதநேய ஜனநாயக கட்சி ஜி.கேட் குமார், எஸ்.டி.பி.ஐ.மாவட்ட தலைவர் முஸ்தாக் பாஷா, தமிழக முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் கு.ராஜாராம், தமிழக விவசாய தொழிலாளர் பி.வாசு, ஆதித் தமிழர் பேரவை எஸ்.கந்தன், தலித் விடுதலை இயக்கம் என்.ஏ.கிச்சா மற்றும் துணை மேயர் சு.ராஜாங்கம், பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி(எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா. ஷெரீப் மற்றும் கூட்டணி இயக்கத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர்

# அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருவெறும்பூர் தாலுகா அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல்!

## கழகத் தோழர்கள் – கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்பு!

திருச்சி, ஏப். 6-

திருவெறும்பூர் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வேட்பாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருவெறும்பூர் தொகுதி அதிரும் வகையில் வானவேடிக்கைகளும் பல்வேறு விதமான இசைக்கருவிகளும் கரகாட்டம் , பொம்மை ஆட்டத்துடன் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் ஊர்வலமாக வந்து திருவெறும்பூர் தாலுக்கா அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

தமிழகம் முழுவதும் வரும் 23-ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறுகிறது. அதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 30ஆம் தேதி முதல் 6ம் தேதி வரை நடைபெறுகிறது. இதனை தொடர்ந்து அரசியல் கட்சியினர் தங்களது வேட்பு மனுக்களை தீவிரமாக தாக்கல் செய்து வருகின்றனர்.

திருவெறும்பூர் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் திமுக வேட்பாளரான அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேட்பு மனு தாக்கல் செய்வதற்காக பெல் தொ.மு.ச தொழிற்சங்க அலுவலகத்தில் இருந்து கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் மேளதாளங்கள் முழங்க வான வேடிக்கைகளுடன் கரகாட்டம் பொம்மை ஆட்டம் மற்றும் தாரை தப்பட்டைகள் முழங்க ஊர்வலமாக வருகை புரிந்தார், அப்பொழுது அவருக்கு தொண்டர்கள் வேல் கொடுத்து வழி நெடுகிலும் மலர் தூவி உற்சாக வரவேற்பளித்தனர் மேலும் இதனை அடுத்து திருவெறும்பூர் பகுதி திமுக இளைஞரணி சார்பில் கிரேன் மூலம் மாலை அணிவித்தனர்.

அதன் பிறகு அன்பில் மகேஸ்பொய்யாமொழி கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் திருவெறும்பூர் தாலுக்கா அலுவலகத்திற்கு வந்து தனது வேட்பு மனுவை திருவெறும்பூர் தேர்தல் நடத்தும் அலுவலரான அமுதாவிடம் வழங்கினார்.

பின்னர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் திருவெறும்பூர் தொகுதிக்கு வேட்பாளராக மூன்றாவது முறை தன்னை நிறுத்தியதற்கு தலைவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதற்காகவும் மேலும் திருவெறும்பூர் தொகுதியில் தான் செய்த வளர்ச்சி பணி மற்றும் கூட்டணிகட்சியினரின் பலம் மற்றும் ஐந்து ஆண்டுகள் செய்த சாதனைஆகியவை என்னை மீண்டும் என்னை வெற்றி பெற செய்யும் என்றும்,

மேலும் வெற்றி பெற்ற பிறகு என்ன செய்ய போகிறோம் என்ற தேர்தல் வாக்குறுதியை வைத்து தேர்தலில் வாக்கு கேட்பதாகவும், 2016-ஆம் ஆண்டு முதல் முதலாக இந்த தொகுதியில் போட்டியிட்ட வந்த பொழுது எந்த மனநிலையில் வந்தேனோ அதே மனநிலையில் தான் தற்போது உள்ளேன் என்றும் இன்னும் தொகுதி மக்கள் நான் அதிகம் செய்வேன் என்ற நம்பிக்கை மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

நான் எம்எல்ஏவாகவோ அமைச்சராகவோ அல்லது ஒரு சேவகனாக இந்த தொகுதியில் செயல்படுவேன்.

மக்களுக்கு தேவையான பல்வேறு நலப் திட்டங்களை தொகுதியில் மேற்கு கொண்டுள்ளேன் இதுவரை ரூ 450 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளை இந்த திருவெறும்பூர் தொகுதியில் மேற்கொண்டுள்ளதாகவும்

திருவெறும்பூர் தொகுதியில் 20 ஊராட்சி, ஒரு பேரூராட்சி, ஒரு நகராட்சி, 13வார்டு மாநகராட்சி என பல்வேறு பட்ட நிர்வாகம் இருந்தாலும் அவர்களுக்கு தேவையான அனைத்தும் செய்து கொடுக்கப்படும்.

அதேபோல் அரியமங்கலம் குப்பை கிடங்கு மாற்றுவதற்கு உரிய முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தான் அமைச்சராக உடனே இந்த பகுதிக்கு வந்து பார்வையிட்டதாகவும் அந்த இடத்தில் குப்பை சாயில் அதிகமாக இறங்கி உள்ளதால் அதில் கட்டிடங்கள் கட்ட முடியாது அதனால் அந்த இடத்தில் தற்பொழுது பொழுதுபோக்கு பூங்கா அமைக்க நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேருவிடம் கேட்டு நிதி பெற்று நடைபெறும்.

10 ஆண்டுகளுக்கு பிறகு தான் அந்த இடத்தில் கட்டிடம் கட்டப்படும் இந்த குப்பையை ஈரப்பதம் உள்ள குப்பை மற்றும் காய்ந்த குப்பை என இரண்டாக தரம் பிரித்து அவற்றை அங்கிருந்து அகற்றும் பணியில் நடைபெறுகிறது, இரு 2027-ஆம் ஆண்டுக்குள் இந்த இடத்திலிருந்து குப்பைகள் அகற்றப்படும்.

தமிழகத்தில் எத்தனை போட்டிகள் இருந்தாலும் தமிழகத்திற்கும் டெல்லிக்கும் தான் இடையில் போட்டி என்றும், நாம் என்ன செய்தோம் என்பதை சொல்லித்தான் வாக்கு சேகரிக்கிறோம் கல்வியில்தமிழகத்தில் மும்மொழிக் கொள்கையை நாம் ஏற்க முடியாது மாநில உரிமைக்கு குரல் கொடுப்போம் அங்கு இருந்து கொண்டு அவர்கள் நாம் என்ன செய்ய செய்ய வேண்டும் என கூறுவதை நம்மால் ஏற்க முடியாது இங்குள்ள மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து நான் அதனை செய்வோம் எனக் கூறினார்.

மேலும் இந்த விழாவில் திருச்சி எம்.பி. துரை வைகோ, மண்டலம் மூன்றின் தலைவர் மதிவாணன், கே.என். சேகரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ராஜ்குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி திலீபன் ரமேஷ் தேமுதிக நிர்வாகி டி.வி.கணேஷ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள்,தொண்டர்கள் என பல ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

---

### நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூரில்

# வேட்பாளர் கே.எஸ்.மூர்த்தி இருசக்கர வாகனத்தில் வீடு வீடாக வாக்குச் சேகரிப்பு!

நாமக்கல், ஏப்.6-

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் தொகுதியில் நாமக்கல் மேற்கு மாவட்க் கழகப் பொறுப்பாளரும், கழக வேட்பாளருமான கே.எஸ். மூர்த்தி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.


முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான இவர், இம்முறை மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார். பரமத்தி வேலூர் பொத்தனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில், இருசக்கர வாகனத்தில் வீதி வீதியாகச் சென்று நிர்வாகிகளுடன் இணைந்து வீடு வீடாக வாக்குச் சேகரித்தார். அவரது இந்த எளிமையான பிரச்சார முறையை அப்பகுதி மக்கள், உற்சாகமாக வரவேற்றனர்.

இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள் வைரமணி, அருண், அருள், கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---



சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர். இரா.இராஜேந்திரன் பொன்னமாபேட்டையில் உள்ள தில்லை நகர்த பெண்டம் ராமசாமி தெரு கோபால் தெரு உட்பட பகுதியில் வீடு, வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் இருந்தனர்.



திருச்சி மாவட்டம் லால்குடி சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் பாரிவள்ளல் தனது வேட்புமனுவைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தார் இந்த நிகழ்வில் தி.மு.க. மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, தே.மு.தி.க. வடக்கு மாவட்ட செயலாளர் குமார், தொழிலதிபர் முருகவேல், பார்க்கவ குல மக்கள் இயக்கம் சத்யநாதன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

---

# ஜன விஸ்வாஸ் திருத்த மசோதாவுக்கு கண்டனம்!

## மாநிலங்களவையில் இருந்து சு.கல்யாணசுந்தரம் வெளிநடப்பு!



புதுடெல்லி, ஏப்.6-

ஜன விஸ்வாஸ் (விதிமுறைகள் திருத்தம்) மசோதா, 2026, ஏப்ரல் 2, 2026 அன்று இந்திய நாடாளுமன்றத்தால் நிறை வேற்றப்பட்டது. மக்கள் விரோத இந்த சட்ட திருத்த மசோதாவிற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்.

மார்ச் 27, 2026 அன்று வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தச் சட்டம், சிறு சிறு தவறுகளை குற்றமற்றதாக்குவதன் மூலம் “வணிகம் செய்வதை எளிதாக்குதல்” மற்றும் “வாழ்க்கையை எளிதாக்குதல்” என்ற தவறான இந்த சட்ட திருத்த மசோதாவை ஒன்றிய அரசு வணிகர்கள் மற்றும் சிறு வியாபாரிகள் மீது திணிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் உள்ளது.

மேலும், அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படுவது மற்றும் நீதித்துறை பங்கு குறைக்கப்படுவது குறித்து கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

எனவே ஜன விஸ்வாஸ் திருத்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும். என்பதை வலியுறுத்தியும், ஒன்றிய அரசின் எதேச்சதிகாரம் தனத்தை கண்டித்தும் தமிழ்நாடு மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யானசுந்தரம் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் மாநிலங்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.”

---

### என்.கௌதமன் தலைமை!

# நாகை சட்டமன்றத் தொகுதி கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம்!

## வேட்பாளர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா சிறப்புரை!

நாகை. ஏப்.6-

நாகை மாவட்டம் நாகை சட்ட மன்ற தொகுதி நாகை நகரம், நாகூர் நகரம், நாகை வடக்கு ஒன்றியம் ஆகியவற்றின் கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் நாகையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்கினார். நாகை நாடாமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல. மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சிக்கல் என். ஆனந்த், நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில் குமார், கூட்டணி கட்சிகளை சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள் காங்கிரஸ் கட்சி சுபாஸ்சந்திர போஸ், ம.தி.மு.க. ஸ்ரீதர், மார்க்ஸ்ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெங்கேடேஷ், விடுதலை சிறுத்தைகள் கட்சி சக்திவேல், மனித நேயே ஜனநாயக கட்சி யூசுதீன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிவகுருபாண்டியன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் செய்யதுஅலி, சமத்துவ மக்கள் கழகம் கல்யாணசுந்தரம், திராவிட கழகம் புபேஸ்குப்தா, நெப்போலியன், தே.மு.தி.க. பிரபாகரன், மக்கள் நீதி மையம் முகமது அலாஸ், சிவசேனா சுந்தரவடிவேல், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்துவரவேற்றார். கூட்டத்தில் நாகை சட்ட மன்ற தொகுதி வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா கலந்து கொண்டு வாக்கு கேட்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் திருமருகல் தெற்கு ஆர்.டி.எஸ். சரவணன், திருமருகல் வடக்கு செல்வ.செங்குட்டுவன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, பி.என்.கார்த்தி, கேஸ் வி. செந்தில், தமயேந்தி, பெ.முருகா னந்தம், வ. கமல், சுரேந்தர், எஸ்.பால்ராஜ் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் இரா.தங்கதுரை, எஸ். செல்வா, விஜய.கணபதி, ஷாஜகான் மற்றும் ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன் உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சட்டமன்ற தேர்தலில் கழகத்தலைவர் தளபதி அவர்களின் கரத்தை உயர்த்தும் வகையில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடும் மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லாவை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற நாகை நகரம், நாகூர் நகரம், நாகை வடக்கு ஒன்றியம் ஆகியவற்றின் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழகத்தினர் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு சேகரித்து வெற்றியை தலைவர் தாபதியிடம் சமர்ப்பது என்று தீர்மாமனம் நிறைவேற்றப்பபட்டது.



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி தரங்கம்பாடி மீனவர் கிராமத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் பூம்புகார் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் நிவேதா எம்.முருகன் மீனவர் சமுதாய பஞ்சாயத்தார்கள் மற்றும் மீனவர்களிடம் ஆதரவு திரட்டி பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்தார் உடன் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம். ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றிய கழக செயலாளர்கள் எம். அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா, பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட், தரங்கம்பாடி பேரூராட்சி துணைத் தலைவர் பொன்.ராஜேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.